Thalaivaasal

# தலைவாசல்
Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 40 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | நவம்பர் 10, 2020




### மலசலகூடக குழியில் விழுந்து சிறுமி உயிரிழப்பு வவுனியாவில் சம்பவம்

வவுனியா - ஓமந்தை பன்றிக் கெய்த குளம் பகுதியில் புதிதாக

03

## தமிழ் அரசியல்வாதிகள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்
### இல்லாவிட்டால் தூக்கி எறியப்படுவீர்கள்



தமிழ் அரசியல்வாதிகள் ஜனநாயக அரசியலை உணர்ந்து தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தூக்கியெறிதலுக்கும் தயாராக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் இராகவன் தமிழ் தேசிய அரசியல் வாதிகளை கடுமையாக சாடியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள், ஏனைய விடயங்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது...

03

## தேவையில்லாத கதைகள் வேண்டாம்
### சுரேன் வந்த வேலையை மட்டும் பார்க்கவும்



சுரேன் ராகவன் தான் வந்த வேலையை பார்க்காமல் எம்மை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரும் தற்போதைய அரசின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தான் வந்த வேலையை பார்க்காமல் இனப்படுகொலை செய்த மொட்டு கட்சியில் இருந்து வந்து இப்பொழுது எங்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்

03

## இன்றும் 305 பேருக்கு தொற்று

இலங்கையில் மேலும் 305 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மினுவங்கொடை மற்றும் பேலியகொடை கொவிட் கொத்தணியில் இதுவரை பதிவான மொத்த கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 11,108 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 14,590 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 9,537 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் 40 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



## கொரோனா மரணம் 40 ஆக அதிகரிப்பு

## இன்றும் 4 பேர் பலி!

இலங்கையில் கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, ராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லம்

03



## 460 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா

இன்று வரையில் 460 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களுள் சிலர் பூரண குணமடைந்து வீடுகளுக்கும் திரும்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பினுள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில விசாரணை செய்வதற்காக, இன்று (10) முதல் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மூவரை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நவம்பர் 7இற்குபின் வந்தவர்களைப் பதிவுசெய்யக் கோரிக்கை

வெளிமாவட்டங்களில் இருந்து நவம்பர் 7ம் திகதிக்கு பின்னர் வட மாகாணத்திற்குள் வந்தவர்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்யவேண்டும். என மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், இவர்களை வீட்டில் சுயதனிமைப்படுத்துதலுக்கு உட்படுத்துவது தொடர்பான முடிவுகளை அவர்கள் புறப்பட்டு வந்த பிரதேசங்களின் நோய் நிலமைகளின் அபாயங்களைப் பொறுத்து சுகாதார மருத்துவ அதிகாரிகள் தீர்மானிப்பர்.

03

## மண்டைதீவில் காணி சுவீகரிக்கும் முயற்சி முறியடிப்பு





யாழ்ப்பாணம் வேலனை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மண்டைதீவு பகுதியில் பொது மக்களின் காணிகளை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் முயற்சி அரசியல்வாதிகளினதும் பொது மக்களினதும் எதிர்ப்புகளையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மண்டைதீவு ஜே 7 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அதாவது மண்டைதீவுச் சந்தியில் கடற்படை முகாம் அமைந்துள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்

03




## தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# கொரோனா உயிரிழப்புக்களை அரசாங்கம் மறைக்கின்றது

## ஹரின் பெர்ணாண்டோ



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் மறைக்கின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஹரின் பெர்ணான்டோ மேலும் கூறியுள்ளதாவது, “நாட்டின் எதிர்க்கட்சி என்ற வகையில், இந்த தொற்றுநோய் சூழ் நிலையில், மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் தொடர்பாக தெரிவிப்பதற்கு, ஓர் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் நேற்று இரவு மாத்திரம், ராஜகிரிய, கம்பஹா, குருநாகல் ஆகிய பகுதிகளில், 4 மரணங்கள் பதிவாகியிருந்தன. இவ்வாறு உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழ் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உண்டு.

அந்த இறப்புக்கு, கொரோனா வைரஸ்தான் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நாட்டை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து காப்பதற்கான முயற்சியை, அரசாங்கம் கைவிட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

மேலும், அரசாங்கத்தின் கவனமின்மை நாட்டை பேரழிவுக்குள் இட்டுச் செல்லும்” என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.





# ‘கொரோனா மரணம்’ சடலங்களை அடக்கம் செய்வது குறித்து இன்னும் இறுதி முடிவு இல்லை’

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்களை புதைப்பதற்கு இதுவரையில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொரோனா தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை தகனம் செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சஅனுமதி வழங்கியதாக நீதி அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளரென அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதியின் இந்த தீர்மானத்திற்கு இஸ்லாமிய அமைப்புக்கள் தமது நன்றிகளையும் வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என சுகாதார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# தீபாவளி கால நடைபாதை வியாபாரத்திற்குத் தடை

யாழ்.மாநகருக்குள் பண்டிகைக்கால நடைபாதை வியாபார நடவடிக்கைகளுக்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் கூறியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். மாநகர முதல்வல், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வருடாவருடம் வழமையாக

யாழ் . மாநகரசபையினால் அனுமதிக்கப்படும் பண்டிகைகால அங்காடி வியாபாரத்திற்கு இம்முறை முற்றாக தடை விதிக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் பரவல் மற்றும் தாக்கங்களிலிருந்து பொது மக்களை பாதுகாப்பது எமது கடமையாகும். அந்த வகையில் கொவிட் 19 தாக்கத்திலிருந்து

யாழ்.மாநகரத்தையும், பொது மக்க



ளையும் பாதுகாக்கும் வகையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் முன்னாயத்த நடவடிக்கைகளின் தொடராக சுகாதாரத் துறையினர்

மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை கருத்திற்கொண்டு இம்முறை பண்டிகைகால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

எமது தடையை மீறி யாரேனும் நடைபாதைகளில், வீதியோரங்களில், யாழ். நகர்ப்பகுதிகளில் மற்றும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து எமது மாநகர வருமானவரிப் பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்படுமிடத்து குறித்த விற்பனைப் பொருட்கள் மாநகர சபையினால் கையகப்படுத்தப்படுவதுடன்

அவை மீள ஒப்படைக்கப்படமாட்டாது. மேலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட உரிய நபர்கள் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிகுந்த வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

எனவே எமது மாநகர குடியிருப்பாளர்கள், பண்டிகைகால நடைபாதை வியாபாரிகள், வெளிமாவட்ட பண்டிகைக்கால அங்காடி வியாபாரிகள் என அனைவரும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுள்ளார்.

# வடமராச்சி பகுதியில் கரையொதுங்கிய 18 இந்திய மீனவர்கள்!

சீரற்ற காலநிலை மற்றும் இயந்திரக் கோளாறு காரணமாக 18 இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம், வடமராச்சி கிழக்கு பகுதியில் கரையொதுங்கியுள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குற்பட்ட சுண்டிக்குளம் கடற்கரையில் 14 மீனவர்களும், மாமுனையில் 4 மீனவர்களும் கரையொதுங்கியுள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நிலமை காரணமாகவும், இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க அடிப்படையிலும்,

குறித்த மீனவர்களை உடன் திருப்பி அனுப்புவதற்குரிய நடவடிக்கையினை இலங்கை கடற்படையினர் மேற்கொண்டுள்மை குறிப்பிடத்தக்கது.

# யாழ் பல்கலை மருத்துவபீடத்தில் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் நாளை புதன்கிழமை முதல் மீண்டும் பி. சி. ஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மருத்துவ பீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வு கூடம் மருத்துவ பீடத்தில் இருந்து வேறாக்கப்பட்டு,

தனியான பாதை அமைக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி. சி. ஆர் பரிசோதனைகள் நாளை முதல் இடம்பெறவுள்ளன.

மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ. முருகானந்தன், மு. கலாமதி மற்றும் பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் மட்டுமே, இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென யாழ். பல்கலைக் கழகத்தினால் நான்கு நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களும் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் மாத்திரம் பி. சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி. சி. ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று,

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். கேதீஸ்வரன், உதவிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ். குமாரவேல், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துத் துறைத் தலைவரும், பல்கலைக் கழக கோவிட் 19 செயலணியன் இணைப்பாளருமான மருத்துவர் எஸ். சுரேந்திர குமாரன் மற்றும் நுண்ணுயிரியல், நோயியல் துறை விரிவுரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி. சி. ஆர் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்யப்பட முடியும். மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்படும் பி. சி. ஆர் பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ். ரமேஸ் தெரிவித்துள்ளார்.

# அரச திணைக்கள, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் விபரம் தரக் கோரிக்கை

வடமாகாணத்தில் இயங்கும் அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இம் மாதம் 13ம் திகதிக்கு முன்னர் தங்கள் திணைக்களங்கள், நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களது விபரங்களை வழங்கவேண்டும்.

மேற்கண்டவாறு மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில், 13ம் திகதிக்கு முன்பதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட வேண்டும்.

வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த அறிவிப்பை தாம் விடுப்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார். ஒவ்வொரு நிறுவனமும் தமது ஊழியர்களில் மூத்த நிலையிலுள்ள ஒருவரை நிறுவனத்திற்கான இணைப்பாளராக நியமனம் செய்து அவரது விவரங்களையும் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு வழங்க வேண்டும்.

# எதிர்வரும் 12ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்

2020 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முன்வைக்கப்படும் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வை முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள்பற்றிய குழு தீர்மானித்தது.

இதற்கமைய முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மற்றும் மூன்றாவது வாசிப்பு ஆகியன இடம்பெறும். அதனையடுத்து பிற்பகல் 5 மணி முதல் 8 மணிவரை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் யோசனை சபை ஒத்திவைப்பு பிரேரணையாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைக்கான கேள்வியை எழுப்புவதற்கு நேரம் ஒதுக்கப்படாது என்பதுடன், மதியபோசன இடைவேளைக்காகவும் விவாதம் இடைநிறுத்தப்படாது.

அத்துடன் 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி கௌரவ நிதியமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்படும்.

# மாங்குளத்தில் மனித எச்சங்கள் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பகுதியில் மனித எச்சங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் வீதியின் ஒன்பதாவது கிலோ மீட்டர் பகுதியில் கரிப்பட்டமுறிப்பு சந்திக்கு அருகாமையில் உள்ள, வி.சிவசுப்பிரமணியம் என்பவரது வயல் காணி துப்பரவு செய்து அந்தக் காணியில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

குறித்த காணி பெக்கோ இயந்திரங்கள் மூலம் துப்பரவு செய்யப்பட்டு மீண்டும் உழவு இயந்திரம் மூலம் உழவு செய்யப்பட்டு நெல் விதைக்கப்பட்ட நிலையில் மண்வெட்டி கொண்டு குறித்த வயல் நிலங்களுக்கான வரம்புகளை அமைக்க முற்பட்டபோது,

வெடிபொருள் இருந்தை அவதானித்தவர்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு கடந்த மூன்றாம் திகதி வெடிபெருட்களை பார்வையிட்ட போது இவ்வாறு மனித எச்சங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில்,

மூன்றாம் திகதி முதல் இன்றுவரை குறித்த பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கின்றது.

இன்றைய தினம் நீதிபதி அவர்கள் வருகை தந்து குறித்த இடத்தை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழ் அரசியல்வாதிகள்...

அரசியல் கைதிகள், காணாமல் போனவர்கள் உள்ளிட்ட வடமாகாண மக்களுடைய அரசியல், வாழ்வியல் சம்பந்தமான விடயங்களைக் குறித்து தேசிய மட்டத்தில் விவாதிக்கவோ, ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளைத் தேடும் நகர்வுகளை மேற்கொள்வதற்கு எனக்கு இருக்கும் உரிமையைப் பற்றி சில பிரிவினைவாத ஃ இனத்தேசியவாத தமிழ் அரசியல்வாதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்த நிலைமை அவர்களுடைய துர்நாற்றம்வீசும் அரசியல் சித்தாந்தத்தையே காட்டுகின்றது.

50 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களை தம்முடைய அரசியல் கைதிகளாக அடிமைப்படுத்திய இவர்களுடைய அரசியல், இப்போது அம்பலமாகி இருக்கின்றது.

தமிழ் மக்களுடைய உரிமைகளையும், உணர்வுகளையும், உடைமைகளையும் அறியாமல், தங்களுடைய அதிகார அரசியலை தக்கவைப்பதற்காக செயற்படும் குறுகிய எல்லைக்குள் இருந்து வெளிவந்து, விசேடமாக தமிழ் இளைஞர்களுடைய எதிர்காலத்தில் நியாயமும் சரியான வாய்ப்புமுள்ள அரசியலை உருவாக்குவதற்கான நேரம் வந்துள்ளது.

வட-கிழக்கு தேசியத் தமிழரும், மலையகத் தமிழரும், தமிழ் பேசும் முஸ்லிம்களும் உள்ளிட்ட எல்லோருமே பிரிக்க முடியாததும் உடைந்துபோக முடியாததுமான இலங்கையின் சம குடிமக்கள். அரசியல் உள்ளிட்ட எல்லா விடயங்களிலும் சமமானவர்கள். ஆகையினாலே அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் ஒரு கூட்டுப் பொறுப்பே தவிர ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் தனிப்பட்ட சொத்தல்ல.

10 மாத கால ஆளுநர் பணியில், தமிழ் மக்களுக்கு என்னால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளை, பல்லாண்டு காலமாக தமிழ் அரசியல்வாதிகளால் செய்ய முடியாமல் போனதென்று அவர்களே கூறிய சாட்சிகள் உண்டு.

ஆகையினாலே இன-மையப்படுத்திய சர்வாதிகாரப் போக்குள்ள பழுத்த அரசியல்வாதிகள் 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான பங்கெடுத்தலில் உருவாகும் ஜனநாயக அரசியலை உணந்து தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் தூக்கியெறியப்படுதலுக்கும் தயாராக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## தேவையில்லாத...

தமிழ் கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லோரும் தங்களுடைய நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்,தவறாக செயற்படுகிறார்கள் என தெரிவித்திருக்கிறார்

நான் ஒன்றைகேட்க விரும்புகின்றேன் “நீங்கள் வடக்கு மாகாண ஆளுநராக இருந்த போது மக்களே உங்களுடைய குறைபாட்டை தாருங்கள். நான் அதை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கிறேன்” என்று சொன்னீர்கள் நான் உட்பட பலர் கொடுத்த குறைபாடுகளை குப்பை கூடையில் போட்டீரே என்பது ஏன் என்பது தெரியவில்லை.

இப்பொழுது அரசியல் கைதிகளை விவகாரத்தை பற்றி பரிசீலிப்பதற்கு 9 மாதங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். சுரேன் ராகவன் அவர்கள் விரும்பினால் வடக்கில் தேர்தலில் போட்டியிடலாம். மக்கள் ஆதரவு இருந்தால் வெல்லலாம். அல்லது உங்களுடைய பூர்வீகமான இடத்தில், கொழும்பில் போட்டியிடலாம்.அது அவருடைய விருப்பம் .

எனினும் வடக்கு-கிழக்கு மக்களுடைய பிரதிநிதிகள் பற்றி விமர்ச்சிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். இல்லாவிட்டால் அவரைப் பற்றி நாங்கள் இன்னும் பல விடயங்களை சொல்ல வேண்டிவரும். அவருடன் நேரடியான விவாதத்திற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே அவருடைய விமர்சன கருத்துக்களை இத்துடன் நிறுத்தவேண்டும் இதை நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

சுரேன் ராகவன், வடக்கு மாகாண அளுநராக இருந்தவர் இப்பொழுது பல விடயங்கள் பேசுகின்றார் குறிப்பாக அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசுகின்றார் நீதி அமைச்சரை கேள்வி கேட்கின்றார்.

அவர் இதையெல்லாம் வடக்கு மாகாண ஆளுநராக இருக்கின்ற பொழுது செய்திருக்கலாம். அதை விடுத்து

மைத்திரிபால சிறிசேனவின் முகவராக இருந்துவிட்டு இப்போது அதைப் பற்றி இன்னொரு ஆட்சி வந்த பிறகு பேசுவது தமிழ் மக்களை ஒரு ஒருவகையில் ஏமாற்றும் வேலையாகவே நாங்கள் பார்க்கின்றோம்

அவர் இந்த அரசாங்கத்தினுடைய நியமன பாராளுமன்ற உறுப்பினர் எங்களுடைய அரசியல் கைதிகள் விடுதலைபற்றி ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவர் பேசலாம் ஆனால் எங்களுடைய வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ் தேசியம் சார்ந்த அரசியல்வாதிகளுடைய செயற்பாட்டை விமர்சிப்பதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. அவர் அவ்வாறு பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் அவர் தமிழர் என்பதால் அவர் மீது மக்கள் வைத்துள்ள மதிப்பினை அவர் குறைத்துக் கொள்ளக்கூடாது.

எங்களைப் பற்றி விமர்சிக்கக் கூடாது எங்களுடைய தலைவர்களைப் பற்றி விமர்சிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## நவம்பர் 7இற்கு பின்...

இவ்வாறு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய தகவல்களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின்

## மண்டைதீவில்...

கப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணி உரிமையாளர் மற்றும் அப்பகுதி மக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர்கள் என பலரும் ஒன்று திரண்டு காணி அளவீடு செய்யும் இடத்திற்கு முன்பாக எதிர்ப்பு வெளிப்படுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் காணி அளவீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

கடற்படையினருக்கு காணி சுவீகரிக்கும் எதிர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் பொது செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்முன்னாள் வட மாகாண சபை

உறுப்பினரான விந்தன் கனகரத்தினம் உட்பட வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், சிறிபத்மராசா, என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலசலகூட...

வெட்டப்பட்ட மலசலகூட குழியில் விழுந்து சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் பெற்றோர் இன்று (செவ்வாய்க் கிழமை) வெளியில் சென்ற நிலையில் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி தவறுதலாக மலசல கூடக் குழியில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த சிறுமியின் உறவினர்கள் உடனடியாக சிறுமியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் குறித்த சிறுமி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியை சேர்ந்த சத்தியசீலன் சயீவினி (வயது 6) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மலசல கூடத்திற்காக புதிதாக வெட்டப்பட்ட குழியில் மழை நீர் நிரம்பியிருந்த நிலையில் இவ்வாறு குறித்த சிறுமி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனா மரணம்...

ஒன்றில் வசித்து வந்த 51 வயதுடைய நபரொருவர் கொரோனா தொற்றுக்கு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 17 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் தொற்றுடன் நியுமோனியா நிலைமை ஏற்பட்ட காரணத்தால் இவரது மரணம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு 10 பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனா தொற்றுக்கு உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட சுவாச கோளாறு மரணத்திற்கான காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், கம்பஹா உடுகம்பொல பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவரும் கொவிட் 19 தொற்றுக்கு உயிரிழந்துள்ளார்.

கடந்த 09 ஆம் திகதி கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கொவிட் தொற்றுடன் நியுமோனியா ஏற்பட்ட காரணத்தால் அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, 55-60 வயதுக்கு இடைப்பட்ட ஆண் ஒருவரும் கொரோனா தொற்றுக்கு உயிரிழந்துள்ளார்.

கடந்த 08 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# சிகிச்சைகளை முடித்து 18 பேர் வீடுகளுக்கு சென்றனர்





கோப்பாய் Covid-19 சிறப்பு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை முடித்த தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த 18 பேர் இன்று அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஊழஎனை-19 தடுப்பு ஆலோசனை மற்றும் நோய் நிர்ணய அட்டைகள் வழங்கப்பட்டதுடன் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி தலைவரின் சம்மதத்துடன் ஒவ்வொருவருக்கும் கல்லூரியில் இருந்த வேப்பமரகன்று வழங்கி வைக்கப்பட்டது.

## நேற்று 300இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா



நாட்டில் நேற்று மொத்தமாக 356 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்ட அனைவரும் பேலியகொட கொரோனா கொத்தணியில் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்து பத்தாயிரத்து 800ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்தைக் கடந்து 14 ஆயிரத்து 285ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 595 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை எட்டாயிரத்து 880 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 370 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## 6 இலட்சத்தை தாண்டிய பி.சி.ஆர். பரிசோதனை

இலங்கையில் இதுவரை 6 இலட்சத்திற்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று (திங்கட்கிழமை) மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தினால் 8 ஆயிரத்து 272 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 6 ஆயிரத்து 693 ஆக உள்ளது.

# கொவிட்-19 தடுப்பு மருந்தை வழங்க உலக சுகாதார அமைப்பு இணக்கம்!

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில், இலங்கையின் சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு கொவிட்-19 தடுப்பு மருந்தை வழங்க உலக சுகாதார அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்த கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் இன்று இடம்பெற்றதுடன் இதில், உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.





இந்நிலையில், இதற்குரிய விடயங்களை ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தேவையான நிதியைப் பெறுவது, தடுப்பு மருந்து பெற வேண்டியவர்களைத் தீர்மானிப்பது உள்ளிட்ட பல விடயங்களை குறித்த குழு ஆராயவுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று நோயாளிகளை உடனடியாக அடையாளம் காண்பதற்கான, ஒரு இலட்சம் அன்டிஜென் பரிசோதனைக் கருவித் தொகுதிகளை உலக சுகாதார அமைப்பு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து கட்டுப்பாடுகளை கடுமையாக்குமாறு வேண்டுகோள்



மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் மாவட்டம் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்க வேண்டும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வைரஸ் பரலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் குறித்து விளக்கமளிக்கையிலேயே அதன் தலைவர் உபுல் றோஹன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைகள் உள்ளிட்ட முக்கிய இடங்களை திறப்பதற்கு பொறுத்தமான எவ்வித சூழலும் இன்னும் உருவாகவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே போன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அல்லது அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும் இயன்றளவு ஊழியர்களின் எண்ணக்கையை மட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட் கட்டுப்பாட்டுக்காக வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தொடர்பிலும் வரையறைகள் விதிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கொத்தணிகளாக தொற்றாளர்கள் இனங்காணப்படும் எண்ணிக்கை குறைவடைந்தாலும் நாடளாவிய ரீதியில் உருவாகிய கிளைக்கொத்தணிகளில் தினமும் குறிப்பிட்டளவு தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என்றும் எனவே சகல மாவட்டங்களிலுமுள்ள பொது மக்கள் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஊரடங்கு காலத்தில் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் செல்லாது

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காலகத்தில் வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்களைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் பயணிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ முடியாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் பயணிக்க சிறப்பு அனுமதியைப் பெற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு செல்ல சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடனும் சில நிபந்தனைகள் அடிப்படையிலும் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.